நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலர் செயல்முறைகள்

ப.மு.எண் 2189/அ1/2019நாள் .03.2019.

பொருள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் – தொகுதி4ன் கீழ் இளநிலை உதவியாளர் நியமனம் – நாகப்பட்டினம் வருவாய் மாவட்டம் – சீர்காழி கல்வி மாவட்டம் சீர்காழி மாவட்டக் கல்வி அலுவலகம் – இளநிலை உதவியாளர் திரு.ந.க.இராஜ்குமார் என்பாருக்கு – இளநிலை உதவியாளர் பதவியில் – பணிவரன்முறை செய்து ஆணைவழங்கல் – தொடர்பாக.

பார்வை – 1. நாகப்பட்டினம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.7037/அ1/2017 நாள் 14.11.2017.

2. அரசாணை எண் 101. பள்ளிக் கல்வித்துறை நாள் 18.05.2018.

3. சீர்காழி மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.1079/அ1/2019 நாள் 01.03.2019.

நாகப்பட்டினம் வருவாய் மாவட்டம், நாகப்பட்டினம் கல்வி மாவட்ட எல்லைக்குட்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்தில்பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள ஆணையின்படி 2015-16 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பட்ட தொகுதி 4 தேர்வெழுதி தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் பெற்று தற்போது சீர்காழி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.ந.க.இராஜ்குமார் என்பாரின் பணியை வரன்முறை செய்து உரிய ஆணை வழங்கிடக் கோரி பார்வை3ல் கண்டவாறு சீர்காழி மாவட்டக் கல்வி அலுவலர் கருத்துருக்களைப் பணிந்தனுப்பியுள்ளார். சீர்காழி மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்கண்ட விவரப்படி திரு.ந.க.இராஜ்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

வ. எண்	பெயர் மற்றும் பதவி	தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண்	பிறந்த நாள்	பணியில் சேர்ந்த நாள்	பணிவரன்முறை செய்யப்படும் நாள்
01	திரு.ந.க.இராஜ்குமார், இளநிலை உதவியாளர்	81 / 2015-2016	21.05.1992	15.11.2017 முற்பகல்	15.11.2017 முற்பகல்

பணிவரன்முறை செய்த விவரத்திற்குரிய பதிவுகளை தொடர்புடைய பணியாளரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. பரிசீலனைக்குப்பின் தொடர்புடையவரின் அசல் பணிப்பதிவேடு 1 திரள் மற்றும் அசல் கல்விச் சான்றுகள் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைத்திட தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்.
நாகப்பட்டினம்.

பெறுநர் – தொடர்புடைய பணியாளர் (உரிய வழியாக)
நகல் – மாவட்டக் கல்வி அலுவலர், சீர்காழி

ந.க.எண் 1079/அ1/2019, நாள் - -2019
அவர்களுடைய பணிவரன்முறை ஆணை மகிழ்ச்சியுடன் வழங்கப்படுகிறது.